[இடைவேளைக்குப் பின்னர் சட்டப் பேரவை மாலை 3-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் மீண்டும் கூடியது.]

4. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(அ) அறிமுகம் செய்யப்படும் மசோதாக்களின் நகலை முன்னதாக உறுப்பினர்களுக்கு வழங்குதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலை இந்தக் கூட்டத் தொடக்கத்தில் திரு. அழகர்சாமி அவர்கள் அவர்களுடைய நடை முறைக் கேள்வியை எடுத்து விளக்குவார்கள்.

***திரு. சோ. அழகர்சாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், மசோதாவை அறிமுகம் செய்து வைப்பதற்கு ஒரு நாளைக்கு முன்னாலாவது எங்கள் கைக்குக் கொடுக்க வேண்டும். இதுதான் மக்கள் சபையில் அனுஷ்டிக்கப்படுகிறது. அஜெண்டா இரவு வெகு நேரத்திற்குப் பிறகு தான் எங்கள் கைக்குக் கிடைக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்னால் கிடைக்க வேண்டும். இதைப் பற்றித் தலைவர் அவர்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியை எழுப்ப அனுமதி கொடுக்கிறேன்.

(இ) விற்பனை வரி (திருத்த) மசோதா ஆய்வை ஒத்திவைத்தல்

Thiru K. RAMAMOORTHY : On a point of order, Sir. By virtue of the notifications issued under section 59 (1) of the Madras General Sales Tax Act, 1959, the provisions of this amending Bill have already come into operation. As such there is no urgency for introducing this Bill at this stage.

ஆகவே இந்த அமென்ட்மெண்ட் ஆக்ட் பற்றிய விவாதத்தையும், நிறைவேற்றும் பொறுப்பையும் சட்டசபையில் தொடர்ச்சியாக வருகின்ற மற்ற நாட்களில் வைத்துக் கொள்ளலாம். இதை இவ்வளவு அவசரமாக வைத்துக் கொள்ளத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்ப அனுமதிக்கிறேன்.

(உ) வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நாட்களில் நிதி மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.

* THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, the budget has been introduced in this Hon. House and it indicates certain increase in the rate of sales tax. Under Rule 153 of the Assembly Rules, the Hon. Speaker has fixed the dates for the general discussion on the budget and he has fixed Tuesday, the 27th June 1967 as the last date for the general discussion. The general discussion is not yet over, the House is still carrying on the general discussion. Demands for grants have to come thereafter. In the Parliament also, the Finance Bill comes only after the conclusion of the voting on